


முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி. வெ.கணேசன் ஆகியோர் சென்னை, மயிலாப்பூர், லஸ் கார்னரில் நேற்று (01.03.2024) தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மத்திய சென்னை மாவட்டம் மயிலாப்பூர் மந்தைவெளி அனைத்து வியாபாரிகள் சங்கம் இணைந்து நடத்தும் ”வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர் பலகை மாற்றம் குறித்த விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தார்கள். உடன் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா மற்றும் வணிகர் சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அரசுப் பள்ளிகளில் பணியாற்றும்

# ஆசிரியர்களுக்கு முழு உடல் பரிசோதனைத் திட்டம்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - பி.கே.சேகர்பாபு - அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தனர்!

சென்னை, மார்ச் 2-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு முழு உடல் பரிசோதனைத் திட்டத்தினை நேற்று (01.03.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு மற்றும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை ஓமந்தூரரார் அரசு பல்நோக்கு மருத்துவ மணையில் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு முழு உடல் பரிசோதனைத்திட்டத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்து ஆசிரியர்களுக்கு மருத்துவ பரிசோதனை அறிக்கையினை வழங்கினார்கள்.

இவ்விழாவிற்கு பள்ளிக் கல்வித்துறை அரசுச் செயலாளர் ஜெ. குமரகுருபரன் முன்னிலை வகித்தார்.

முதலமைச்சர் அவர்கள் 01.03.2023 நாளிட்ட செய்தி வெளியீட்டில், மாணவர் வாழ்க்கை ஏற்றம்காண, அயராகு உழைக்கும் ஆசிரிய பெருமக்களின் உடல்நலம் காக்க, அனைத்து ஆசிரியர்களுக்கும் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை முழு உடல் மருத்துவ பரிசோதனைத் திட்டம் செய்யப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில் இன்றைய தினம் அமைச்சர் பெருமக்களால், 50 வயதிற்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மருத்துவ முகாமில் உயர் இரத்த அழுத்த பரிசோதைனை, நீரழிவு நோய் பரிசோதனை. இசிஜி பரிசோதனை உள்ளிட்ட 16 வகையான நோய்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் 1,06,985 ஆசிரியர்கள் பயன் பெறுவார்கள்.

திருவல்லிக்கேணி, சென்னை நடுநிலைப்பள்ளியில் 2024-25ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கையினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தொடங்கி வைத்தார். அரசுப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கையினை அதிகரிக்கும் நோக்கில் பொதுமக்கள் மற்றும் பெற்றோர்களுக்கு துண்டுப் பிரசுரங் களை வழங்கி விழிப்பு ணர்வு ஏற்படுத்தினார்.

தொடர்ந்து சேர்க்கைக்கு வருகை தந்த மாணவ, மாணவியர்களை வரவேற்கும் வகையில் மாலை அணிவித்து வரவேற்றார். அதனைத் தொடர்ந்து சேர்க்கை ஆணைகளை வழங்கி மாணவர்களுக்கு புத்தகம், புத்தகப்பைகள் மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

அதன் பின்னர் திருவல்லிக்கேணி, என். கே.டி. மேல்நிலைப்பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். குடிநீர் வசதி, மின்சாரம் மற்றும் அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பது குறித்தும் மாணவர்களிடம் கலந்துரையாடி கேட்டறிந்தார். நேர்மையான முறையில் பொதுத்தேர்வு நடைபெற தேவையான ஒத்துழைப்பை வழங்கிட வேண்டுமென ஆசிரியர்களை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

சென்னை அண்ணாசாலையில் உள்ள ஹிக்கின்பாதம்ஸ் புத்தக விற்பனை நிலையத்தில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் புத்தக விற்பனை பிரிவினை பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு பாடநூல் கழகம் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 100 இடங்களில் விற்பனை நிலையங்கள் துவங்கிட திட்டமிடப்பட்டு முதல் விற்பனை நிலையமாக பாரம்பரிய மிக்க புத்தக நிலையமான ஹிக்கின் பாதம்ஸ் புத்தக விற்பனை நிலையத்தில் புதிய விற்பனை பிரிவு தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த விற்பனைப் பிரிவில் திசை தோறும் திராவிடம், முத்தமிழறிஞர் மொழிப்பெயர்த்த திட்டங்கள், இளந்தளிர் இலக்கியத் திட்டம், நாளையத் தலைமுறைக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் போன்றவை விற்பனைகாக வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச்செயலர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், பள்ளிக்கல்வித் துறை அரசுச் செய லாளர் ஜெ.குமரகுருபரன் மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர். கஜலட்சுமி, சென்னை பெருநகர மாநகராட்சி துணை ஆணையர், (கல்வி) திருமதி சரண்யா அரி, பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் முனைவர் க. அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

### தமிழ்நாட்டிலுள்ள வணிக நிறுவனங்களில்

# தமிழில் பெயர் பலகைகள் குறித்த விழிப்புணர்வுக் கூட்டம்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - சி.வி.கணேசன் சிறப்புரையாற்றினர்!

சென்னை, மார்ச் 2

முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் வளர்ச்சித் துறையும், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பும், மத்திய சென்னை மாவட்ட மயிலாப்பூர் - மந்தைவெளி அனைத்து வியாபாரிகள் சங்கமும் இணைந்து தமிழ் நாட்டிலுள்ள வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகைகள் மாற்றம் குறித்து விழிப்புணர்வுக் கூட்டம் மற்றும் பேரணி 01.03.2024 வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் மயிலாப்பூர் - மந்தைவெளி அனைத்து வியாபாரிகள் சங்கத் தலைவர் மயிலை சி. பாஸ்கர் அவர்கள் வரவேற்புரையும், வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகைகள் மாற்றம் தொடர்பாக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் தொடங்கி வைத்து சிறப்புரையும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தமிழில் பெயர்ப்பலகை மாற்றம் குறித்த சிறப்புரை ஆற்றினார்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை அருள் கலந்து கொண்டார். தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா, மாநிலப் பொருளாளர் ஹாஜி ஏ.எம். சதக்கத்துல்லா ஆகியோர் தமிழில் பெயர்ப்பலகை மாற்றம் குறித்த விளக்க உரையினை ஆற்றினார்கள்.

அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பாரதியார் வாழ்ந்த இந்த மயிலைப் பகுதியில் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இந்தக் கூட்டம் நடைபெறுவது மிகச்சிறப்பாகும் என்றும் வணிக நிறுவனங்களில் பெயர்ப்பலகை தமிழில் 5 மடங்காக அமைய வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

“தமிழை வளர்க்கிறோம் என்பதைவிட தமிழைப் பாதுகாக்க வேண்டும்“ என்ற சூழ்நிலையில் இருக்கிறோம் என்றும் இந்தக் கூட்டம் வணிக நிறுவனங்களில் பெயர்ப்பலகை தமிழில் அமைய தொடக்கமாக இருக்கும் என்றார். மே 1ஆம் தேதிக்குள் தமிழ்நாடு முழுவதும் உள்ள வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகைகள் வைக்க வேண்டுமென்றார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் ஆற்றிய உரையில், மொழி என்பது ஒரு நாட்டினுடைய அடையாளம் என்றும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை இருக்க வேண்டும். சாதாரண ஏழை, எளிய பாமர மக்கள், அதிகம் ஆங்கிலம் தெரியாத மக்கள் நகரங்களுக்கு வருகிறபொழுது இங்குள்ள கடைகளில் பெயர்ப் பலகை ஆங்கிலத்தில் உள்ளதை மாற்றி தமிழில் பெயர் எழுதுவது தமிழுக்குப் பெருமை சேர்ப்பதாகும். “யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்” என்ற பாரதியாரின் வரிகளுக்கு மெருகூட்டும் வண்ணம், “இனிய தமிழையே எங்கும் காண்போம்” என்ற நிலை ஏற்பட வேண்டுமென்று கூறினார்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழி என்று 1956ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டு தமிழ்நாட்டில் வணிக நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தின் பெயரை தமிழில் வைக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது என்றும், வணிகர்களாகிய நாம் இன்னும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக நம் தாய்மொழியாகிய தமிழை நம் நிறுவனங்களின் பெயர்ப்பலகையில் மாற்றம் செய்வோம் என்று உறுதியேற்போம் என்றும் பெயர்ப்பலகையில் எழுத வேண்டிய பெயர் அளவுகள் தமிழில் 5 மடங்கிலும் ஆங்கிலத்தில் 3 மடங்கிலும் பிற மொழிகளில் 2 மடங்கிலும் இருக்க வேண்டும் என்றும் உறுதியேற்றனர்.

மதுரையில் மே 5-இல் நடைபெறும் மாநாட்டில் வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகை வைப்பதற்கு வலியுறுத்தப்படும் என்றார்.

மயிலாப்பூர் - மந்தைவெளி அனைத்து வியாபாரிகள் சங்க பொதுச் செயலாளர் பி.அரிதாசன் நன்றியுரை ஆற்றினார்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற பேரணியில் வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை அமைப்பது தொடர்பான துண்டுச் சீட்டுகள் வழங்கப் பட்டன.




தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்து ஊர்களுக்கும் சென்று கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி பொது மக்களுக்கு உணவும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். உடன் மண்டலத் தலைவர்கள் டி காமராஜ், எஸ். இந்திரன், பீரிதீப் சந்திரன் மற்றும் பகுதி கழக செயளாலர்களும், வட்ட கழக செயளாலர்களும், கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும் பொது மக்களும், பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

# களத்தில் நிற்கிறார்! கை கூப்பி வாழ்த்துவோம்!



ஜனநாயகத்தைக் காக்கக்
களம் அமைக்கும் முதல்வருக்கு
வாழ்த்து சொல்வோம்!

இந்தியா
காவி போல ஒரே நிறம் இல்லை
கருப்பும் சிவப்புமாய்
இரவும் பகலுமாய்
முரண்பாடுகளின் இணக்கம்!
பல மாநிலங்களின் ஒன்றியம்!
பல மொழிகளின் வானவில்!
பண்பாடுகளின் பஞ்சாமிர்தம்!
மலை, கடல், மணல், காடு, வயல் என்று
ஐந்திணைகளின் கூட்டணி!

தாவரங்கள் கூட
தமது இலைகளைப் போல
அதே நிறத்தில் பூப்பதில்லையே!
மனிதர்கள் உடம்பும்
உச்சி முதல் உள்ளங்கால் வரை
ஒரே நிறம் இல்லையே!
அப்படித்தானே ஒரே கட்சியின் அதிகாரத்
தொடர்ச்சியில்
உலக ஜனநாயகம் இல்லையே!

ஆகவே
பல கட்சிகளின் ஒன்றியமாகத்
தேர்தலுக்கும் முன்பே
இண்டியா கூட்டணி அமைக்க
முன்னெடுத்த முதல்வரை வாழ்த்துவோம்!

ஆளும் கட்சி அதிகாரம் தொடர
தேர்தல் நேரத்தில் கூட்டணி வைக்கப்
பல கட்சிகளின் ஆதரவு தேடி
அறிக்கைவிட்டு ஆள்பிடிக்கிறது!

மற்ற மாநிலங்களில்
பதவி வேட்கைக்கு வால்பிடித்துப்
பரிணாம வளர்ச்சியில்
தங்கிப் போன
தேங்கிப்போனவர்களைப் போலத்
தமிழர்களை நினைத்து வந்தவர்கள்
தலைகுனிந்து போயிருக்கிறார்கள்!

ஒன்றிய அரசின் அதிகார வேட்டைக்கு
அச்சப்பட்டு மாறாமல்
தமிழர்களைத் தக்க வைத்திருக்கும்
தளபதியை வாழ்த்துவோம்!

அப்போது ஜனநாயகத்துக்காகக்
கொட்டடியில் அடைபட்டுக் கிடந்தார்!
இப்போது ஜனநாயகத்துக்காக
கோட்டையிலிருந்து குரல் கொடுக்கிறார்!

வங்கக் கடலோரம்
இன்னொரு உதய சூரியனை
இருக்கச் செய்திருக்கிறார்!

மழை வெள்ளப் பேரிடரில்
மக்கள் தத்தளித்த போது
நம்பிக்கை தருவார்கள் என்று
வானத்தைப் பார்த்தவர்களிடம்
ஜனநாயகத்தின் மீது
அவநம்பிக்கையை விதைத்தார்கள்.
அப்போதும்
அரசு இயந்திரத்தோடு
கட்சிக்காரர்களையும்
களத்தில் இறங்க வைத்த
முதல்வரைப் பாராட்டலாம்!

உண்டி கொடுத்து உயிர் வளர்க்கும்
விவசாயிகள் தெருவில் நிற்கிறார்கள்!

தில்லியில் விவசாயிகள் பேரணி
தடுப்பதற்காக சாலையில்
அதிகார ஆணிகளின் விளைச்சல்!

போராடும் தன் நாட்டு மக்களையே
அந்நியராக்கித் தண்டிக்கிறார்கள்!

அதிகாரத்தில் இருக்கும் ஆசை
பொறுப்புணர்விலும் வேண்டுமே!

கைகாட்டிகூட வழி காட்டக் கூடும்
ஆனால் தலைமை என்பது
உடன் பயணிக்கும்!

தமிழா!
முந்திய சாஸ்திரம் மெய்
பிந்திய சாஸ்திரம் பொய் என்று
தீர்மானம் செய்து கொள்ளாதே
என்றார் பாரதி!
புனித நூலுக்கும்
எந்த உரை இருக்க வேண்டும்
எவற்றைப் புறக்கணிக்க வேண்டும்

என்பதெல்லாம்
தங்களுடைய விருப்பமே என்ற
ஆணவக் கூச்சலுக்கிடையே
புரட்சிகரமான தனிப்பட்ட மாற்றங்களைச்
சக்தி வாய்ந்த ஒருவரின்
வாழ்க்கை சாத்தியமாக்க முடியும்.
ஜனநாயகம், சமத்துவம், சுதந்திரம்
எனும் நம்பிக்கைகளுக்காகக்
காத்துக் கிடக்கிறது மனித குலம்!
மதிப்பு என்பது
இருக்கிற இடத்தால் கிடைப்பது இல்லை

கோபுரத்தின் மேலே
இருக்கிறது என்பதற்காக
இறை நம்பிக்கை உடையவர்கள் கூட
பறவைகளின்
எச்சங்களைக் கும்பிடுவதில்லையே!

அவை சூரியனில் உலர்ந்து
மழையில் நனைந்து
காற்றில் உதிர்ந்து
கண்ணுக்குத் தெரியாமல் போய்விடும்.

தலைமை என்பது
போற்றாரையும் பொறுத்தல்!
தேர்தல் நேரத்தில் மட்டுமின்றி
எல்லா நேரங்களிலும்
தன்னை ஆதரிக்காதவர்களையும்
அரவணைத்துச் செல்லுதல்!

பதின்ம வயதில்
ஹெர்குலிஸ் மிதிவண்டியில்
புதிய பூமி படம் பார்க்க
அப்துல் கரீம் என்பவருடன்
பயணித்திருக்கிறார்.
வளர்ந்த பிறகும்
குடும்ப உறவுகளில்
சாதி மதம் கடந்து நிற்கிறார்!
ஆகவே
செயற்கை நுண்ணறிவின்
நவீன தொழில் நுட்பத்தில்
தமிழையும் தமிழகத்தையும்
வளர்த்தெடுக்கக்
களத்தில் நிற்கும் முதல்வரைக்
கைகூப்பி வாழ்த்துவோம்!



**ம.ரா**
கணையாழி




தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 71வது பிறந்தநாள் விழா, மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், ஆணைக்கிணங்க எஸ்.ஆர்.ராஜா, எம்.எம்.ஏ, ஜி.கே.ரவி, எ.விவேகானந்தன் ஆலோசனைப்படி ஒன்றிய துணை செயலாளர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் முடிச்சூர் ஊராட்சிக்குட்பட்ட ஆறு கிளைகளிலும் இருவண்ணக் கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது. அன்னை இந்திராநகர் பள்ளியில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டுப்புத்தகம், பேனா, இனிப்புவழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் மற்றும் கழக தோழர்கள் மஞ்சு ஜெயபால், சத்யா சந்திரன், பி.எஸ். ரமேஷ், வி.ஆர்.குமார், கே. கந்தசாமி, கே.குமார், சுனில் மோர்யூ, ஏ. முருகன், ஆர். மணிவண்ணன், பி.மலர்விழி, வெங்கடலு, புஸ்பவாகினி, சி.இளஞ்செழியன், எஸ். தினேஷ், இ.கோபால், வி.ருக்குமணி, கே.தேவிகா, மாஸ்டர் விஜய், சங்கர் சுரேஷ், ஜெயா, சாலமோன், சீனிவாசன், மூர்த்தி, ஆர்.கே.மணி, எஸ்.மீனா, லட்சுமணன், சண்முகம், அசோகன் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, பொதுமக்கள், பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.